


தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், நேற்று முன்தினம் (29.04.2026), 2026–தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வாக்கு எண்ணும் செயல்முறை குறித்த பயிற்சியில் கலந்து கொண்டு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (RETURNING OFFICERS), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்(ASSISTANT RETURNING OFFICERS), மாவட்ட கணினி நிரலாளர்கள்(DISTRICT PROGRAMMERS) மற்றும் உதவி கணினி நிரலாளர்கள்(ASSISTANT PROGRAMMERS) ஆகியோர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டம் தி.மு.க. சார்பில் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நாளை (02.05.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் ஆவடி அருகே பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய் கிறிஷ் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

தலைமைச் செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பிடிசி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.சினிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்ச்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** மே 4 தேதி அன்று 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணியாற்றிய

# கழக - கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கு மனமார்ந்த நன்றி!

### நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணி அறிக்கை!

நெல்லை,மே 1-

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் சு.சுப்பிர மணியன் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

நெல்லை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளராக போட்டியிட முதல் முறையாக எனக்கு வாய்ப்பு அளித்து நெல்லை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுடன் என்னை அறிமுகம் செய்து வைத்த திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும்,தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களுக்கும், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணை பொதுச்செயலாளர்,

தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் மண்டலப் பொறுப்பாளர்கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன், உள்பட மாவட்ட, மாநில,மாநகர,ஒன்றிய, பகுதி, வட்ட, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கட்சித் தலைவர்கள்,நிர்வாகிகள்,தேர்தல் பணியை ஒருங்கிணைத்த தேர்தல் ஆணையத்தின் அலுவலர்கள், காவல்துறையினர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்,தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மே தினம் வாழ்க!

சனநாயக
**மே தினம்!**
தமிழ்நாட்டின் பெருமிதம்!
காரணம்;
**பேரறிஞர் அண்ணா!**
**முத்தமிழறிஞர் கலைஞர்!**

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!**
மேதினத்திற்கு பொது விடுமுறை!
மேதினத்திற்கு ஊதியத்துடன்
கூடிய விடுமுறை!
மேதின நினைவுச் சின்னம்!
மேதின விழா ! ஆகியன.
அன்றொரு நாள்!
அமெரிக்கா
சிகாகோ நகரில்
ஆர்த் தெழுந்த
பெருங்கூட்டம்
வடித்தெடுத்த
எட்டு மணி நேர வேலை
எட்டு மணி நேர ஓய்வு
எட்டு மணி நேர உறக்கம்!
இன்று வரை இயங்குகிறது!
உழைக்கும் வர்க்கத்தின்
உன்னதமாம்!

**எம் தலைவர்**
**முதல்வர்களுள் முதல்வர்! முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்**
தலைமையிலான
தங்கத் தமிழ் நாட்டில்!
மேதினியில் சிறந்த
மேதினம் வாழ்க!
திராவிடம் வாழ்க!
**திராவிட மாடல் வாழ்க!**



**பெரம்பூர் த. ஆறுமுகம்**
பொதுச் செயலாளர்
சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக
ஊழியர் முன்னேற்றச் சங்கம்
(தொ.மு.ச)

# புதிய எழுச்சி பெறுவோம்!



அமெரிக்காவில் அதிகாலை முதல் அந்தி சாயும் வரை வேலை செய்யும் ஒரு நிலை இருந்தது. இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்க தொழிலாளர்கள் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வெளிக்காட்டினர். பதினாறு, பதினெட்டு மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்பது சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1806ம் ஆண்டு பிலடெல்பியா நகர தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 1820 மற்றும் 1830களில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று பற்பல வேலை நிறுத்தங்கள் நாட்டில் நடைபெற்றன. 10 மணிநேரம் என்ற கோரிக்கை பல தொழில் மையங்களின் முன்வைக்கப்பட்டது.

பிலடெல்பியா நகர எந்திரத் தொழிலாளர்களின் சங்கம் தான் உலகின் முதற்சங்கமாக கருதப்படுகிறது. இத்தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்தான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின. 10 மணி நேர வேலைநாள் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 1827ல் பிலடெல்பியாவில் கட்டிடம் கட்டும் தொழி லாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில்தான் இந்தக் கோரிக்கை பிரதானமாக வைக்கப்பட்டது.

1834ல் நியூயார்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இந்த ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர். நாள் ஒன்றுக்கு அவர்கள் 18 மணியிலிருந்து 20 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டிய நிலை இருந்தது. இதன் விளைவாக, தொழிற்சங்க இயக்கத்தின் அதிவேக வளர்ச்சியால் 1850களில் புதிய உத்வேகத்தை அடைந்தது. முதலாளித்துவத்தின்கீழ் தொழிலாளர்கள் சுரண்டப்பட்ட எல்லா வளரும் நாடுகளிலும் இப்போராட்டங்கள் தலைதூக்க ஆரம்பித்தன.

ஆஸ்திரேயாவில் கட்டிடத் தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு என்ற கோரிக்கையை முன் வைத்து போராடி, அதை அடைவதில் வெற்றியும் பெற்றனர்.

இதன் விளைவாக உள்ளூர் தேசிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியமும், எழுச்சியும் உருவானது. 1866ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் நாள் பால்டிமோர் எனும் இடத்தில் தேசிய தொழிற்சங்கத்தை உருவாக்கினார்கள்.

தேசிய தொழிற்சங்கத்தின் முதல் மாநாடு 1866ல் நடைபெற்றது. அதில் அமெரிக்கா முழுமைக்கும், 8 மணி நேர வேலைதான் என்பதை சட்டமாக்க வேண்டும். அதன் மூலம் மட்டுமே முத லாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து இந்நாட்டின் தொழிலாளியை காப்பாற்ற முடியும். அதற்காக நாம் நம்முடைய சக்தி அனைத்தையும் ஒன்றுதிரட்ட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அதன்விளைவாக, 1886ம் ஆண்டு அமெ ரிக்கா, சிகாகோ நகரில் அடிமைப்பட்டுக் கிடந்த தொழிலாளர்களை ஒருங்கிணைத்து தங்களது உரிமைகளை கேட்டு, போராட்டம் நடத்தி, பலர் தங்கள் அங்கங்களையும், தன்னுயிரையும் இழந்தனர். இறுதியாக, உரிமை கிடைத்த நாளாக தொழிலாளர்கள் உரிமையை மீட்டெடுத்த நாள் மே நாள்.

உழைப்பவர்கள் நினைவில் நிறுத்தவேண்டிய நாள்; உழைப்பவன் உரிமைக்காக தியாகம் செய்த நாள்; உழைப்பவன் தனக்குரிய உரிமைகளை புரிந்து கொண்ட நாள்; தங்களது உரிமைக் காக உழைப்பவர்கள் தங்களை அழித்துக் கொண்ட நாள்; உழைப்பவன் தன் விடிவை நோக்கிச் செல்ல தன் உதிரத்தை சிந்தி பாதை அமைத்த நாள்; உழைப்பவன் முன்னேற, தம்முடைய கல்லறை களை படிக்கல்லாக்கித் தந்த நாள்; நம் முன்னோர்களின் தியாக நினைவு நாள்; நாம் வணங்குவோம், வணங்கி உழைக்கும் வர்க்கம் உலகை ஆள பாடுபடுவோம்".

**முதன்முதலில் தமிழகத்தில்**
**மே தினம் கொண்டாடப்பட்டது!**

தந்தை பெரியார் அவர்கள் ரஷ்யா சென்று வந்த பிறகு சோஷலிச கருத்துக்களை திராவிட இயக்கக் கருத்துக்களோடு ஒன்றாக இணைத்து திராவிட இயக்கங்கள், தொழிலாளர் உரிமைக்காக என்றும் போராடும் என்று கொள்கைப் பிரகட னம் செய்தார்கள்.

தமிழகத்தில் முதன்முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது. சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் தான் முதன்முதலில் மே தினக் கூட்டத்தினை 1923ம் ஆண்டு சென்னையில் நடத்தினார்கள்.

**திராவிட இயக்கத்திற்கே உரியது!**

தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்திற்கென ஒரு வரலாறு உண்டு. நாம் தொழிற்சங்கத்திற்கு புதியவர்கள் அல்ல. இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தை தலைமை தாங்கி நடத்திய பெருமை திராவிட இயக்கத்திற்கே உரியது. 1918ம் ஆண்டிலேயே நாகையில்தான் இரயில்வே தொழிலாளர்க்கென ஒரு தொழிற்சங்கம் அமைக்கப்பட்டது. அந்நாளில் அந்த தொழிற்சங்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர் திராவிட பரம்பரையில் வந்த ரங்கோன் பக்கிரிசாமிப்பிள்ளை என்பவர்தான்.

**தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு!**

தொழிலாளர்கள் உழைப்பை சுரண்டிக் கொண்டிருந்த வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இரயில்வே தொழிலாளர்கள் பல போராட் டங்களை நடத்தினர். அப்போராட்டத்தில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., சிந்தனைச்சிற்பி சிங்கார வேலர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, தந்தை பெரியார் ஆகியோர் தொழிலாளர்கள் மத்தியில் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தினர். பல்வேறு போராட்டங் களை திராவிட இயக்கத் தலைவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். அதன் மூலம் தந்தை பெரியார் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் சிறை படுத்தப்பட்டனர். சென்னை, பி.என்.சி. மில்லில் நடைபெற்ற போராட்டத்தில் தொழிலாளர் கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. தலைவராக இருந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் நாடு கடத்த வேண்டுமென்று வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் ஆணையிட்டது. திரு.வி.க.வை நாடு கடத்த வேண்டுமென்ற சட்டம் நிறைவேற்றப் பட்டால் நீதிக்கட்சி தனது ஆட்சியை ராஜினாமா செய்யுமென்று அறிவுறுத்தப்பட்டதின் காரணத்தால் திரு.வி.க.வை நாடு கடத்தும் சட்டத்தைத் திரும்பப் பெற்றது.

கழகம் தோன்றிய நாள் முதல், பொதுவுடைமை கருத்துக்களையும், திராவிட இயக்க கோட்பாடுகளையும் ஒன்றிணைத்து, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், தற்போதுள்ள கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் திரா விட இயக்கக் குறிக்கோளிலிருந்து சற்றும் விலகாமல் தொழிலாளர்களை பாதுகாத்து, அவர்களின் கோரிக்கைகளை எவ்வித சமரசமுமின்றி நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி வருவதை நாம் நன்கு அறிவோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களும் ஆட்சி பொறுப் பேற்ற பின் தொழிலாளர்க்கென ஒரு தனிப்பிரிவை உண்டாக்கி ஒரு அமைச்சரையும் நியமித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மே தினத்தை ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்த பெருமை இந்தியாவிலேயே கலைஞர் அவர்களையே சாரும்.

சென்னை, சிந்தாரிப்பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்கா என்ற பெயரை மே தினப் பூங்கா என பெயரிட்டார். அந்த பூங்காவில் மே தின நினைவு சின்னத்தினை நிறுவி, ஆண்டுதோறும், மே நாளன்று, மலர் வளையம் வளைத்து, மே நாள் தியாகிகளுக்கு கழகத் தலைவரும், மாண்புமிகு முதல்வரும் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகளும் மலரஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

தொழிலாளர்களுக்கு 4 சதவிகிதம் குறைந்த பட்ச போனஸ் இருந்த நிலையை 8.33 சதவிகிதமாக மாற்றிய பெருமை கழக அரசையே சாரும். இது இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

இப்படி தொழிலாளர்க்கென பல்வேறு சட்டங்களை திருத்தி, தொழிலாளர்களுக்கு பல்வேறு நன்மைகளையும், உரிமைகளையும், கழக ஆட்சி யில் நடந்தேறியது. அதுமட்டுமல்லாமல் சாலை யோரத்தில் வியாபாரம் செய்வோர், ஆட்டோ தொழிலாளர்கள், கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் போன்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அமைப்புசாரா நலவாரியத்தை அமைத்து, தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு வழி அமைத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. விவசாயிகள் நலன் பெறவும், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து பல்வேறு திட்டங்களை அவர்களுக்காக நிறைவேற்றியது கழக அரசு.

தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடி பெற்ற சலுகைகள் மற்றும் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு ஆகியவைகள் இன்று ஒன்றிய அரசினால் மறுக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களுக்காக நிறைவேற்றப்பட்ட தொழிற்சங்க சட்டங்களை, இன்று மத்திய அரசு, 4 சட்டத் தொகுப்புகளாக மூர்க்கத்தனமாக நடை முறைப்படுத்தி தொழிலாளர்களின் உரிமைகளை பறித்துள்ளது. இதனால் தொழிலாளர்கள் பெற் றிருந்த உரிமைகள் அடியோடு அகற்றப்பட்டு, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். மீண்டும் பழைய நிலைக்கே செல்ல வேண்டிய அவல நிலையை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருகிறது.

தொழிற்சங்கங்கள் ஒன்றிய அரசை எதிர்த்து, பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், எதற்கும் செவிசாய்க்காமல் தொழிலாளர் விரோத போக்கை கையாண்டு, முதலாளிகளுக்கும், கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும் உறுதுணையாக இருந்து வரு கிறது. இந்நிலை மாறிட வேண்டுமானால், தொழி லாளர்களாகிய நாம் ஒன்றிய அரசை எதிர்த்து போராடி, நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட வேண்டும். தொழிலாளி என்றைக்கும் தன்னு டைய போராட்டத்தின் மூலம் தான் எதையும் சாதிக்க முடியும் என்பதுதான் வரலாறு. அதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய நிலைக்கு ஒன்றிய அரசால் தள்ளப்பட்டுள்ளோம்.

தொழிலாளர் விரோத, விவசாய விரோத, மக்கள் விரோத, ஜனநாயக விரோத, பாசிச பா.ஜ.க. ஆட்சியை அனைவரும் ஒன்று கூடி, இழந்த உரிமையை மீண்டும் பெற்றிட, இந்திய நாட்டின் அரசியல் சாசனத்திற்கெதிராகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கும் போக்கு, நாட்டின் பன்முகத்தன்மைக்கு மாறாகவும், ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே மதம் என்று செயல்படும் பாசிசத்திற்கெதிராக கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் இணைந்து நாட்டில் அமைதிப் புரட்சியை உருவாக்க இந்த மே நாளில் உறுதியேற்போம்!

**புதியதொரு உலகம் செய்வோம்;**
**கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்!"**



**மு.சண்முகம்** Ex MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை